நாணயச் சபை

இலங்கை மத்திய வங்கி

2016 ஒத்தோபர் | நுண்பாகநிதிச் சட்டப் பணிப்புரைகள் | 2016 இலக்கம் 03

# வைப்புக்கள்

2016ஆம் ஆண்டின் 6ஆம் இலக்க நுண்நிதியளிப்புச் சட்டத்தின் 11ஆம் பிரிவின் கீழ் விடுக்கப்பட்டது.

**1. தவணை மற்றும் சேமிப்பு வைப்புக்களை ஏற்றுக்கொள்வதன் மீதான கட்டுப்பாடுகள்**

1.1 ஒவ்வொரு உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனியும்

i) எந்தவொரு தவணை வைப்புக்களையும் மூன்று (03) மாத காலப்பகுதிக்குக் குறைவான காலப்பகுதிக்கு ஏற்றுக்கொள்ளவோ அல்லது புதுப்பிக்கவோ அல்லது அது ஏற்றுக்கொள்ளப்பட்ட அல்லது அத்தகைய வைப்புக்கள் புதுப்பிக்கப்பட்ட திகதியிலிருந்து முப்பத்தாறு (36) மாதங்களுக்கும் கூடுதலான காலப்பகுதிக்கு ஏற்றுக்கொள்ளவோ அல்லது புதுப்பிக்கவோ கூடாது.

ii) காலத்திற்குக் காலம் நாணயச் சபையினால் குறித்துரைக்கப்பட்டவாறு குறைந்தபட்ச தேவைப்பாட்டு மட்டத்திற்கும் கீழே அத்தகைய கம்பனியின் மைய மூலதனம் குறைவாக இருக்குமிடத்து ஏதேனும் வைப்புக்களை ஏற்றுக்கொள்ளக்கூடாது.

iii) பராயமடையாதோரிடமிருந்து ஏதேனும் வைப்புக்களை ஏற்றுக்கொள்ளக்கூடாது. இந்நோக்கத்திற்காக "பராயமடையாதோர்" என்பதன் கருத்து பராயமடைந்தோர் கட்டளைச் சட்டம் (அத்தியாயம் 66) மற்றும் அதற்குச் செய்யப்பட்ட திருத்தங்களின் கருத்தின்படி சட்ட ரீதியாக பராயமடையாதோர் வயதை அடையாத ஆட்கள் என்பதாகும்.

**2. உயர்ந்தபட்ச வைப்புத் தொகை**

2.1 ஒவ்வொரு உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனியும் தனிப்பட்ட முறையில் அல்லது கூட்டாக வைத்திருக்கும் வைப்பாளர்களிடமிருந்து மூன்று இலட்சத்திற்கும் (ரூ.300,000) கூடுதலான மொத்தப் பெறுமதியினைக் கொண்ட வைப்புக்களை ஏற்றுக்கொள்ளவோ புதுப்பிக்கவோ கூடாது.

2.2 உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனியொன்றின் மொத்த வைப்புக்கள் அத்தகைய கம்பனியின் மொத்தப் பெறுமதியிழப்புக் கடன்கள் மற்றும் முற்பணங்களின் ஐம்பது சதவீதத்தினை (50%) விஞ்சக்கூடாது.

**3. ஊக்குவிப்புத் திட்டங்களுக்குத் தடை**

3.1 எந்தவொரு உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனியும் வைப்புக்களைத் திரட்டுவதற்காக ஊக்குவிப்புத் திட்டங்கள் எதனையும் அறிமுகப்படுத்தக்கூடாது. இப்பணிப்புரையின் நோக்கத்திற்காக "ஊக்குவிப்புத் திட்டங்கள்" என்பதன் கருத்து வட்டி மூலமான நன்மைகளைத் தவிர வைப்பாளர்களுக்குப் பணம் அல்லது பொருட்களை வழங்குவதற்கான ஒழுங்குகளைச் செய்தல் என்பதாகும்.

| | | |
|---|---|---|
| 4. இயங்காத கணக்குக் கொள்கை | 4.1 | ஒவ்வொரு உரிமம் பெற்ற நுண்பாக நிதிக் கம்பனியும் இயங்காத கணக்குகளுக்காகப் பின்வருவனவற்றை உள்ளடக்கிய கொள்கையொன்றினை உருவாக்கிக் கொள்ளுதல் வேண்டும் |

i) இயங்காத கணக்கின் காலப்பகுதியை அடையாளம் காணுதல்

ii) செயற்படுகின்ற கணக்குகளிலிருந்து இயங்காத கணக்குகளை வேறாக்குதல்

iii) இரட்டைக் கட்டுப்பாடுகளின் கீழ் மீளச்செயற்படுத்துதல்

இந்திரஜித் குமாரசுவாமி
**நாணயச் சபையின் தலைவர்**
**இலங்கை மத்திய வங்கியின் ஆளுநர்**